2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமங்கலம் மற்றும் கல்லுப்பட்டியிலுள்ள பயணியர் விடுதிகள் பழுதடைந்துள்ளதாகவும், அவற்றைப் பழுது நீக்கம் செய்து கொடுக்க வேண்டுமென்றும் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பழுதுபார்க்கும் பணிகளை நிறைவேற்றித் தரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

வெள்ளக் கால்வாய்த் திட்டம்

***69 திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதியில் அத்திக்கடவு அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அவினாசி அத்திக்கடவு திட்டத்தினைச் செயல்படுத்த ஆவன செய்யப்படுமா என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதற்கான ஆய்வுப் பணிகள் நிறைவடைந்து, 1,862 கோடி ரூபாய்க்கு அறிக்கை தயார் செய்யப்பட்டு, இந்தத் திட்டத்தை வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தவுள்ளதால், வழிகாட்டுதலின்படி இத்திட்டத்திற்கு விரைவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு நிதியை ஒதுக்காவிட்டாலும், மாநில அரசின் நிதியிலிருந்து இந்தப் பணியைத் துவங்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பணிகள் விரைவிலே துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்கு பேச வாய்ப்பு தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி எனது கேள்வியைத் தொடங்குகிறேன்.

அவினாசி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, அத்திக்கடவு அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டம், கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மிகப் பெரிய திட்டம். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்ததற்காக, அவினாசி தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், அவினாசி அத்திக்கடவு திட்டத்தில், கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள குளம் குட்டைகளில் நீர் நிரப்புவதற்காக, அவினாசி அத்திக்கடவு உபரி நீர் கால்வாய் திட்டத்தைச் செயல்படுத்தினால், மேட்டுப்பாளையம், அவினாசி, கோவை வடக்கு, திருப்பூர் வடக்கு, சூலூர், பவானிசாகர், பெருந்துறை ஆகிய வட்டங்கள் விவசாயத்திற்கும் மற்றும் பொது மக்கள் குடி தண்ணீர் தேவைக்கும் பயன்பெறும். இத்திட்டத்தை நிறைவேற்றினால் மேற்கூறிய 8 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ளடங்கிய 538 குட்டைகள், 71 ஏரிகள் பயன்பெறும். 148 கிராமங்களில் வசித்துவரும் சுமார் 20 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். எனவே, இக்கோரிக்கையை நிறைவேற்றக் கோரி அப்பகுதி மக்கள் 50 ஆண்டுக் காலமாக போராடி வருகிறார்கள். இத்திட்டத்தை தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

2012 ஏப்ரல் 23]

அறிவிப்பார்கள் என்று அவினாசி தொகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புவதோடு ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கருப்பசாமி, உட்காருங்கள் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், வற்றாத ஜீவநதியான தாமிரபரணி ஆறு ஓடுகிறது. இவ்வாற்றில் மழை மற்றும் வெள்ளக் காலங்களில் ஏற்படுகிற வெள்ள நீர் வீணாகக் கடலில் சென்று கலக்கிறது. எனவே, இங்கு ஓர் தடுப்பணையோ அல்லது வெள்ள நீர் கால்வாயோ அமைத்து, வறட்சிப் பகுதியான மேலநீலிதநல்லூர் ஒன்றியப் பகுதி பயன்பெறும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்க விரும்புகிறேன். இதன்மூலம் எனது தொகுதி மட்டுமல்லாது, கோவில்பட்டி மற்றும் திருநெல்வேலி தொகுதியும் பயன்பெறும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, அப்பகுதியில் நீர் வரத்து அதிகமாக இருப்பின் அதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, தடுப்பணை கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி—அத்திக்கடவு வெள்ளக் கால்வாய்த் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய நிதி இல்லாவிட்டாலும்கூட, மாநில அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்று அறிவித்ததற்கு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்த நேரத்திலே நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இத்திட்டம் கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் பெருந்துறை வரை பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் மற்றும் குளம்—குட்டைகளை நிரப்புவதற்கான ஒரு அருமையான திட்டம். எனவே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதியைப் பெறாமலேயே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றினால், வறட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் பயன்பெறுவார்கள் என்ற அடிப்படையில், இத்திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பு ரூ.1,862 கோடி. இருந்தாலும், இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு இந்த வருடம் நிதியை ஒதுக்காவிட்டாலும், மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கி, திட்டப் பணிகளைத் துவங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

ஆய்வுக் கூடம்

***5289 திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கோவிலூர் தொகுதி, காரணை பெரிச்சானூர் மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*